OS 106/2024
வா.சா.1 கோட்டீஸ்வரன் த/பெ பச்சையப்பன்
நாள் 12.11.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாய வேலை மற்றும் பாய் விற்பனை வேலை, பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலை செய்கிறேன். நான் குன்னத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன் என்றால் சரிதான். சம்பத் அரியப்பாடி கிராமத்தில் இருக்கிறார் என்றால் சரிதான். பிரதிவாதி பக்கத்து ஊர்க்காரர் என்பதால் எனக்கு நன்கு அறிமுகம் என்றால் சரிதான். பிரதிவாதியின் சித்தப்பா சுப்பிரமணி மற்றும் முனுசாமி ஆகியோரை எனக்கு தெரியும் என்றால் தெரியும். முனுசாமி என்பவர் இறந்துவிட்டார் என்றால் சென்ற வாரம் இறந்துவிட்டார். சுப்பிரமணி மற்றும் முனுசாமி நிலத்தில் நான் பயிர்களுக்கு மருந்து தெளித்து இருக்கிறேன் என்றால் இப்போது இல்லை முன்பு தெளித்து இருக்கிறேன். பிரதிவாதியின் குடும்பத்தில் உள்ளவர்களை எனக்கு தெரியும் என்றால் தெரியும். பிரதிவாதியை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் ரொம்ப நாளாக தெரியும். பிரதிவாதியை 25 வருடங்களாக பழக்கமா என்றால் இருக்கும். பிரதிவாதி மேஸ்திரி வேலை செய்கிறார் பெங்களூருக்கு சென்றும் வேலை செய்கிறார் என்றால் சரிதான்.

2. அசல் வழக்குடன் பிரதிவாதியின் சொத்தை ஜப்தி செய்வதற்கு மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த மனுவுடன் தாக்கல் செய்திருந்த ஆவணத்தில் 2007ம் ஆண்டு பிரதிவாதி காலிமனையாக வாங்கியிருப்பதாக ஆவணத்தில் விவரம் உள்ளது என்றால் காலிமனையாக வாங்கி வீடு கட்டினார். கடன் வாங்கி தான் வீடு கட்டினார் என்றால் ஈக்கிவிடாஸ் வங்கியில் கடன் வாங்கி வீடு கட்டினார். பிரதிவாதி வீடு கட்டுவதற்கு என்னிடமும் கடன் வாங்கினார் என்றால் ஈக்கிவிடாஸ் வங்கியில் வாங்கிய கடனை பிரதிவாதியிடம் கேட்டதால் அதை அடைப்பதற்காக என்னிடம் கடன் வாங்கினார். பிரதிவாதி வங்கி கடனை அடைப்பதற்கு நான் கடன் கொடுத்தது எவ்வளவு காலத்திற்கு முன்பு என்றால் பாண்டு தேதியில் கொடுத்தேன். வங்கியில் வாங்கிய கடனை அடைப்பதற்காக கூறி என்னிடம் கடன் கேட்டாரா என்றால் 2 மகள்களுக்கான திருமணத்திற்காகவும் வீடு கட்டிய கடனை திருப்பி செலுத்துவதற்காகவும் சொல்லி கடன் வாங்கினார். பாண்டு தேதிக்கு முன்னரே பிரதிவாதி வங்கியில் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் அவர் அவ்வாறு சொல்லி தான் வாங்கினார்.

3. என்னிடம் வாங்கிய கடனை பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் அதற்கு எழுதி கொடுத்த வெற்று பாண்டை பிரதிவாதி திரும்ப பெற்று அதனை கிழித்து விட்டார் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் மகள் பவித்ரா திருமணத்திற்காக பிரதிவாதியின் மனைவி மற்றும் பவித்ராவும் என்னிடம் கடன் வாங்கிக்கொண்டு வெற்று பாண்டில் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் அது போன்று இல்லை. அவ்வாறு அவர்கள் இருவரும் வாங்கிய ரூ.40,000/- கடனுக்கு மாதம் தோறும் ரூ.2,000/- வட்டி செலுத்தி வந்தார்கள் என்றால் இல்லை. கடன் தொகை ரூ.40,000/-ல் ரூ.30,000/-ஐ பிரதிவாதியின் மனைவி கவிதா என்னிடம் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் அந்த தொகையை பெற்றுக்கொண்டு நான் எழுதி கொடுத்திருக்கிறேன் என்றாலும் இல்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியாது.

4. வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரை விவரங்கள் ஆங்கிலத்தில் உள்ளது அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு படித்து காட்டினார்கள். யார் படித்து காட்டியது என்றால் வழக்கறிஞர் வீட்டிற்கு வருபவர்களிடம் காட்டி படித்து தெரிந்து கொண்டேன். பிரதிவாதிக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட ஆங்கிலத்தில் உள்ள அறிவிப்பை பிரதிவாதி என்னிடம் கொண்டு வந்து காட்டி கேட்டதற்கு மீதி 10 ஆயிரம் கொடுத்தால் வழக்கு தாக்கல் செய்ய மாட்டேன் என்று சொன்னேன் என்றால் இல்லை. பாண்டில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் பிரதிவாதியின் மனைவி கவிதாவும் மற்றும் வேலு என்பவரும் கையொப்பம் செய்தார்கள். வேலு எந்த ஊர் என்றால அக்ராபாளையம் ஆகும். வேலு எனக்கு பழக்கமா என்றால் அவர் விவசாயம் செய்கிறார் கத்தரிக்கா விற்பனை செய்யும் போது பழக்கம். எனக்கு பழக்கம் என்பதால் நான் அழைத்ததன் பேரில் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் சரிதான்.

5. வேலுவை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க இருக்கிறேனா என்றால் விசாரிக்கிறேன். அவர் எந்த ஊரில் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் குன்னத்தூர் வரும் போது சாட்சி கையொப்பம் செய்தார். பாண்டை எழுதியது யார் என்றால் பாபு என்பவர் எழுதினார். அவர் டிவி, ஏசி மெக்கானிக் கடை சேவூரில் வைத்திருக்கிறார். அவர் எந்த ஊர் என்றால் குன்னத்தூர் ஆகும். அவர் எனக்கு பழக்கமானவர். எனக்கு பழக்கம் என்பதால் நான் கேட்டதன் பேரில் எனக்கு பாண்டு எழுதி கொடுத்தார். பாபுவை எனது தரப்பில் விசாரிக்க இருக்கிறேனா என்றால் விசாரிக்கிறேன். பாண்டு எழுதும் போது யார் யார் இருந்தது என்றால் பாபு, வேலு இருந்தார்கள். பேங்க் கடனை அடைப்பதற்கு பிரதிவாதியும் பிரதிவாதியின் மனைவியும் கடன் வாங்கினார்கள் என்றாலும் மகளின் திருமணத்திற்காக கவிதாவும் பவித்ராவும் கடன் வாங்கினார்கள் என்றாலும் பிரதிவாதி சம்பத் மட்டும் தனியாக என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா பாண்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றாலும் அது மோசடியான ஆவணம் என்றாலும் சரியல்ல.

6. பிரதிவாதி வியாபாரம் செய்து வருமானம் ஈட்டுவதாக முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் கூறியிருக்கிறேன் அவர் என்ன வியாபாரம் செய்கிறார் என்றால் ஆடு, மாடு வாங்கி விற்பனை செய்கிறார். பிரதிவாதி மேஸ்திரி வேலை மட்டுமே செய்கிறார் என்றாலும் ஆடு, மாடு வாங்கி வியாபாரம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மீதி தொகையான ரூ.10,000/- செலுத்த பிரதிவாதி செலுத்த தயாராக இருக்கிறார் என்றாலும் பிரதிவாதி சொத்தை அபகரிக்க வேண்டி தவறான வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கை பிரதிவாதி செலுவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.